# COVID-19 தடுப்பூசி பெறுதல்

Vaccinate WA

CovidVaccineWA.org

தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவது கடினமாக இருந்தது, ஆனால் இப்போது COVID-19 இலிருந்து நம்மைப் பாதுகாக்க இரண்டு தடுப்பூசிகள் உள்ளன.

## தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுகிறது.

உங்கள் தடுப்பூசிக்கான விலையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். உங்களிடம் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது. **நீங்கள் தடுப்பூசி பெறுவதற்காக மட்டும் செல்கிறீர்கள் எனில், உங்கள் தடுப்பூசி வழங்குநர் வருகைக் கட்டணம் வசூலிக்கக்கூடாது**.

## உங்களுக்கு எத்தனை மருந்தளவுகள் தேவை.

சில தடுப்பூசிகளுக்கு, மூன்று முதல் நான்கு வாரங்கள் இடைவெளியில் இரண்டு டோஸ்கள் தேவைப்படும். சிலவற்றுக்கு ஒரே ஒரு டோஸ் போதும். இரண்டு முதல் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு பூஸ்டர் டோஸ் தேவைப்படலாம்.

## தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் செயலாற்றல் கொண்டவை.

அனைத்து தடுப்பூசிகளும் U.S. Food and Drug Administration (FDA, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம்) மூலம் முழுமையான பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன அல்லது அவசரகால பயன்பாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன —அதாவது FDA எந்தவிதமான தீவிர பாதுகாப்பு கவலைகள் இல்லை எனக் கண்டறிந்துள்ளது.

## 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி பெறலாம்..

5+

5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் COVID-19 தடுப்பூசி கிடைக்கிறது. 5 வயது முதல் 17 வயதுடையவர்கள் Pfizer-BioNTech தடுப்பூசியை மட்டுமே பெற முடியும். நியமனச் சந்திப்பைத் திட்டமிட VaccineLocator.doh.wa.gov ஐப் பார்வையிடவும். நீங்கள் 1-800-525-0127 யும் அழைக்கலாம், அழைத்த பின்னர் # ஐ அழுத்தவும். நீங்கள் விரும்பும் மொழியில் சேவையைப் பெற, அழைப்புக்கு பதிலளிக்கும்போது உங்கள் மொழியைக் கூறுங்கள்.

## உங்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படலாம்.

வழக்கமான மற்ற தடுப்பூசிகளைப் போலவே, தடுப்பூசி போட்ட பிறகு உங்களுக்கு கையில் காயம், காய்ச்சல், தலைவலி அல்லது சோர்வு ஏற்படலாம். இவை தடுப்பூசி வேலை செய்வதற்கான அறிகுறிகள் ஆகும்.

## பாதுகாப்பாக இருங்கள்.

நீங்கள் தடுப்பூசி பெற்ற பிறகு, முகக்கவசம் அணியுங்கள், ஆறு அடி (இரண்டு மீட்டர்) இடைவெளியை பின்பற்றுங்கள், **பெரிய அளவில் கூட்டம் கூடுவதை தவிர்த்திடுங்கள்**.

கேள்விகள்? www.CovidVaccineWA.org ற்குச் செல்லவும்

# COVID-19 தடுப்பூசி பெறுதல்

## என்ன தடுப்பூசிகள் கிடைக்கின்றன

பல தடுப்பூசிகள் கிடைக்கின்றன.

அனைத்து தடுப்பூசிகளும் U.S. Food and Drug Administration (FDA, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம்) மூலம் முழுமையான பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன அல்லது அவசரகால பயன்பாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன —அதாவது FDA எந்தவிதமான தீவிர பாதுகாப்பு கவலைகள் இல்லை எனக் கண்டறிந்துள்ளது.

## COVID-19 தடுப்பூசியை யார் பெற வேண்டும்?

தடுப்பூசி பெறுவது உங்கள் விருப்பமாகும். நீங்கள் அதைப் பெற முடிவு செய்தால், உங்கள் தடுப்பூசி வழங்குநரிடம் பின்வரும் தகவல்களை, ஏதேனும் இருப்பின், நீங்கள் தெரிவிக்க வேண்டும்:

- கடுமையான ஒவ்வாமை கொண்டிருப்பது
- காய்ச்சல் இருப்பது
- இரத்தக்கசிவுக் கோளாறு அல்லது உறைவெதிர்ப்பிகள் எடுத்துக் கொள்வது
- நோயெதிர்ப்பு குறைபாடு உள்ளதா அல்லது உங்கள் நோயெதிர்ப்பு மண்டல பாதிப்பிற்கான மருந்தில் இருக்கிறீர்களா?
- கர்ப்பமாக இருக்கிறீர்கள், கர்ப்பமாக திட்டமிடுகிறீர்கள், அல்லது பாலூட்டுகிறீர்கள்
- மற்றொரு COVID-19 தடுப்பூசி பெற்றுள்ளீர்கள்

COVID-19 தடுப்பூசியின் முந்தைய மருந்தளவு அல்லது தடுப்பூசியில் உள்ள எந்தவொரு மூலப்பொருளுக்கும் எதிராக உங்களுக்கு கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால் நீங்கள் தடுப்பூசி பெறக்கூடாது.

தடுப்பூசிகளில் செயலில் உள்ள மூலப்பொருள், மெசஞ்சர் RNA (எம்.ஆர்.என்.ஏ), கொழுப்பு, உப்புக்கள் மற்றும் சர்க்கரைகளுடன் எம்.ஆர்.என்.ஏவைப் பாதுகாக்கவும், உடலில் சிறப்பாக செயல்படவும் உதவுகிறது.

நீங்கள் Pfizer-BioNTech தடுப்பூசி பெற உங்களுக்கு குறைந்தபட்சம் 5 வயது மற்றும் Moderna அல்லது Johnson & Johnson தடுப்பூசி பெற 18 வயது இருக்க வேண்டும்.

## பக்க விளைவுகள் என்ன ?

தடுப்பூசி செலுத்திக் கொண்ட ஒன்று அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு பக்க விளைவுகள் ஏற்படுவது பொதுவானதாகும். சோர்வு, தசை வலி, ஊசி போட்ட கையில் வலி, காய்ச்சல், தலைவலி, மூட்டு வலி, குளிர், குமட்டல் அல்லது வாந்தி போன்றவை பொதுவான பக்க விளைவுகள் ஆகும். உங்கள் அறிகுறிகள் சரியாகவில்லை என்றால், உங்கள் மருத்துவர் அல்லது கிளினிக்கைத் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் தடுப்பூசி மையத்தை விட்டு வெளியேறுவதற்கு முன் 15 முதல் 30 நிமிடங்கள் வரை காத்திருக்க வேண்டும். அதனால், உங்களுக்கு ஒவ்வாமை அல்லது பிற பக்க விளைவுகள் ஏற்பட்டால் உங்கள் தடுப்பூசி வழங்குநர் உங்களுக்கு உதவ முடியும். நீங்கள் காத்திருக்கும்போது, எந்தவொரு பக்க விளைவுகளையும் பற்றி புகாரளிக்க மற்றும் உங்கள் இரண்டாவது மருந்தளவிற்கான நினைவூட்டலைப் பெற v-safe க்கு பதிவு செய்யலாம்: vsafe.cdc.gov (ஆங்கிலத்தில் மட்டும்).

நீங்கள் அல்லது உங்கள் தடுப்பூசி வழங்குநர் தடுப்பூசி பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் முறைக்கு (VAERS) பக்க விளைவுகளைப் பற்றி புகாரளிக்கலாம்: vaers.hhs.gov/reportevent.html (ஆங்கிலத்தில் மட்டும்).

**கிளினிக்கிலிருந்து வெளியேறிய பிறகு உங்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் 911 ஐ அழைக்கவும்.** ஒவ்வாமை அறிகுறிகள் பின்வருமாறு: சுவாசிப்பதில் சிரமம், உங்கள் முகம் மற்றும் தொண்டையில் வீக்கம், வேகமான இதயத் துடிப்பு, உங்கள் உடல் முழுவதும் கடுமையான சினப்பு, தலைச்சுற்றல் மற்றும் பலவீனம்.

## தடுப்பூசி பெற்ற பிறகு நான் என்ன செய்ய வேண்டும்?

**இரண்டு முறை செலுத்த வேண்டிய முறை எனில், உங்கள் இரண்டாவது மருந்தளவிற்கான சந்திப்பைப் பெறுங்கள்.** உங்கள் இரண்டாவது மருந்தளவைப் பெற நீங்கள் மூன்று அல்லது நான்கு வாரங்களில் திரும்பி வர வேண்டும்.

தடுப்பூசி போட்ட பிறகு, நீங்கள் முழுமையான பாதுகாப்பைப் பெற இரண்டு வாரங்கள் வரை ஆகும். உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த இரண்டு முதல் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு பூஸ்டர் டோஸ் பெறுவது பரிந்துரைக்கப்படுகிறது.

Washington State Department of Health

**DOH 348-782 December 2021 Tamil**

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் பெறுவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.govற்கு மின்னஞ்சல் செய்யவும்.